# மத்திய நுவரகம்பலாத பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 09 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 20 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மத்திய நுவரகம்பலாத பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | வருமானம் | செலவினம் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 01 | 04 | - | - | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | - | 61 | - | - |
| | - மேற்படி - | 01 | - | - | - | 61 |
| | - மேற்படி - | 01 | 665 | - | - | - |
| (இ) | நிதிக்கூற்றுகளிலிருந்து | 01 | - | - | - | 77 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | விடுபாடுகள் | | | | | |
| | - மேற்படி - | 03 | - | - | 936 | - |
| | - மேற்படி - | 01 | கணிப்பீடு செய்யப்பட வில்லை | - | - | - |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | - | - | 145 | - |
| | - மேற்படி - | 01 | - | - | - | 75 |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27,294,647 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அக் கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 20,653,447 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருடத்தினை விஞ்சிக் காணப்பட்ட செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 102,472 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 7,185,982 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண அறிவுறுத்தல்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம்** | |
| 153 ஆம் பிரிவு | ஒரு மாதத்திற்கு ரூபா 50,000 இனை விஞ்சுகின்ற நிர்மாண நடவடிக்கைகளோ அல்லது பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கலுக்கான கொடுப்பனவுகளில் 5% ஆன நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட வேண்டியிருந்தும் 12 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 2.276,877 ஆன கொடுப்பனவுகளுக்காக அறவிடவேண்டியிருந்த ரூபா 113,843 ஆன வரித் தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிகள்** | |
| 168(i) | முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அடுத்த வருடத்தின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தும் சபையினால் 2010 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மே 09 ஆந் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. |
| **(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 53,794 பெறுமதியான |

02 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரணமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,443,641 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 700,938 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i). | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - |
| (ii). | வாடகை | 1,313 | 972 | 352 | 790 | - | 791 |
| (iii). | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,108 | 1,853 | - | 2,556 | 730 | 1,826 |
| (iv) | ஏனைய வருமானம் | 7,982 | 933 | 5,704 | 8,410 | 2,996 | 3,939 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 3,960,174 தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து முத்திரைக் கட்டணங்களாக ரூபா 196,756 தொகை கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 வீதவரிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட முன்னேற்றமடைந்த பிரதேசங்களை அடையாளங்கண்டு அறிவிக்கப்பட்டு அப்பிரதேசங்களில் அமைந்துள்ள அசையாத ஆதனங்களிலிருந்து வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கடைகளுக்கான வாடகை

(i) 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளுராட்சிமன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபைக்குரிய கடைகளின் மாதாந்த வாடகை பிரதான மதிப்பீட்டாளர் அல்லது உள்ளுராட்சி மன்ற சேவையின் மதிப்பீட்டாளர் ஒருவரின் மதிப்பீட்டை கருத்திற் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டியதுடன், 05 ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது மதிப்பீட்டு வாடகை திருத்தப்பட வேண்டிய போதிலும், பிரதேச சபைக்குச் சொந்தமான 18 கடைகளுக்குமான மாதாந்த வாடகை 10 ஆண்டுகளுக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த வாடகை அளவின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டிருந்தது.

(ii) சபைக்குச் சொந்தமான 09 பண்டுலகம கடைகளிலிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 336,636 ஆக இருந்ததுடன் நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறான | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறான | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 9,977 | 8,566 | 1,411 | 9,637 | 6,982 | 2,655 |
| ஏனையவை | 3,757 | 3,785 | (28) | 4,485 | 4,970 | (485) |
| உப மொத்தம் | 13,734 | 12,351 | 1,383 | 14,122 | 11,952 | 2,170 |
| மூலதனச் செலவினம் | 38,200 | 47,357 | (9,157) | 56,650 | 30,335 | 26,315 |
| மொத்தம் | 51,934 | 59,708 | (7,774) | 70,772 | 42,287 | 28,485 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (i) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| (ii) | இரண்டாம் தரங்கள் | 04 | 05 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 15 | 17 |
| (iv) | வேறு (அமைய / தற்காலிக) | - | 06 |
| | மொத்தம் | 20 | 29 |

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை விஞ்சி 09 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு சபை நிதியத்திலிருந்து மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,218,384 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத பௌதீக வளங்கள்

வடமத்திய மாகாண பிரதம அமைச்சின் ஊடாக அரிசி மாவுடன் அண்மித்த பேக்கரி உற்பத்தியை பிரபல்யப்படுத்தும் செயற்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்காக 2008 ஆண்டில் ரூபா 814,000 பெறுமதியுடைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டிருந்த போதிலும் அச்செயற்திட்டம் 2010 திசெம்பர் 31 வரையிலும் ஆரம்பிக்கப்படாமையால் அவ் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் செயற்பாடற்று காணப்பட்டது.

### 2.5.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமி ரூபா 10,752,184 ஆக இருந்ததுடன் 01 வருடத்தை விஞ்சிக் காணப்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,931,863 ஆக இருந்தது.

### 2.5.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 488,461 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 142,060 ஆக இருந்தது.

### 2.5.4 அசைவுறாத நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிக் காணப்பட்ட அசைவுறாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 254,166 ஆக இருந்தது.

### 2.5.5 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 5,504,272 ஆக இருந்தது.

### 2.6 செயற்பாட்டு வினைத்திறனின்மை

இரண்டு வருமானக் கட்டுப்பாட்டாளர்களினால் 2006 ஆம் ஆண்டின் போது பகுதிகளில் சேகரிக்கப்பட்ட ரூபா 10,277 பணம் 2010 திசெம்பர் 31 வரையிலும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. அத்தொகைக்குரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.7 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தின் மக்களுக்கான வசதிகள் நலன்புரி செயற்பாடுகள், சுகாதாரம், பாதைகள் மற்றும் பொது உபயோக சேவைகளுக்குரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டமொன்றையும் அத்திட்டத்தினை மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.8 ஒப்பந்த நிர்வாகம்

### 2.8.1 நிர்மாணங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 இன் மாகாண சபை பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபையின் வேலி, வாயிற் கதவு மற்றும் கராஜ் என்பவற்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தச் சங்கமொன்றுக்கு 2009 திசெம்பர் 07 ஆந் திகதி ரூபா 1,915,463 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதில் பக்கமதில் கட்டுவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூபா 99,220 ஆகும். 2011 மார்ச் 10 ஆந் திகதி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புகளில் மதிலின் இடது பக்கத்தில் பெரிய அளவிலான 05 வெடிப்புக்களும் வலது பக்கத்தில் 09 இடங்களிலும் வெடிப்புக்கள் காணப்பட்டதுடன் மொத்த மதிலிற்காகவும் செய்யப்பட்ட ரூபா 99,220 ஆன நிதி ஒரு பயன்பாடற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மாகாணப் பொறியிலாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கரினால் பரிசோதிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்த நிலைமைக் கட்டுப்பாட்டு அறிக்கையின் பிரகாரம் திருப்திகரமற்றதாக இருந்த கீழே குறிப்பிபட்படும் வேலைகள் மீளத் திருத்தப்படாமல் இவ்வேலைவிடயங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| வேலைகள் | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை | திருப்திகரமற்றதாகக் காட்டப்பட்டிருந்த வேலை விடயங்களின் பெறுமதி | நிலைமைக் கட்டுப்பாட்டு அறிக்கையின் பிரகாரம் அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | |
| (i) நவோதாகம உபவீதிக்கு கொங்ரீட் இடுதல் | 991,764 | 54,988 | (i) வீதியில் கிரவல் கனம் திருப்தியில்லை |
| (ii) கொக்கிச்சிய திகனேகம வீதிக்கு கிரவல் போட்டு செப்பனிட்டு தார் இடல் | 514,941 | 21,133 | (i) வீதியின் செப்பனிடல்கள் திருப்தியில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | (ii) கிரவல் கனம் திருப்தியில்லை. |
| (iii) | மஹ விலச்சிய வசம உப வீதிக்கு கொங்ரீட் இடுதல். | 994,379 | 18,400 | (i) வீதியின் கனம் திருப்தியில்லை. |
| (iv) | கம்பிரிகஸ்வெவ கொக்பிட்டியாவ வீதிக்கு தார் இடுதல் | 621,822 | - | (i) வீதியின் செப்பனிடல்கள் திருப்தியில்லை.<br>(ii) இறுதி 100 மீற்றரில் கிரவல் கனம் திருப்தியில்லை. |

**2.9 உள்ளகக் கணக்காய்வு**

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் கட்டுப்பாடு